# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி **பொருளியல்** மதிப்பெண்கள் : 90

## பகுதி – I

(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 x 1 = 20

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்

**1. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படைப் பிரச்சனை**

அ) எண்ணற்ற விருப்பங்கள் ஆ) அளவற்ற வளங்கள்

இ) பற்றாக்குறை ஈ) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உத்தி

**2. பயன்பாடு என்பது**

அ) தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப்புள்ளி

ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி

இ) பண்டங்களின் மொத்த மதிப்பு

ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்

**3. இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்யமாக இருக்கும் போது மொத்தப் பயன்பாடு __________.**

அ.) குறைவாக ஆ.) உச்சமாக இ.) பூஜ்ஜியமாக ஈ.எதிர்மறையாக

**4. ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பைத் தருவது எது?**

அ) நுகர்வு சார்பு ஆ) உற்பத்தி சார்பு இ) சேமிப்பு சார்பு ஈ) முதலீட்டு சார்பு

**5. சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு**

அ} TC / Q ஆ) TVC / Q இ) TFC / Q ஈ) TAC / Q

**6. இறுதிநிலை வருவாய் என்பது ஏற்கனவே உள்ள _______ உடன் கூடுதலாக பெறுவது.**

அ) மொத்த விற்பனை ஆ) மொத்த வருவாய்

இ) மொத்த உற்பத்தி ஈ) மொத்தச் செலவு

**7. எந்த வகை அங்காடியில் போட்டியே இராது?**

அ) நிறைவு போட்டி ஆ) முற்றுரிமை

இ) முற்றுரிமைபோட்டி ஈ) சில்லோர் முற்றுரிமை

**8. பகிர்வுக் கோட்பாடுஎவ்வாறுஅழைக்கப்படுகிறது?**

அ) உற்பத்தி விலைக் கோட்பாடு ஆ) காரணி விலைக் கோட்பாடு

இ) கூலிக் கோட்பாடு ஈ) வட்டிக் கோட்பாடு

www.Padasalai.Net

**9. போலிவாரம் இதனால் தோன்றுகிறது.**
அ) மனிதன் உருவாக்கியஉபகரணங்கள் ஆ) வீட்டில் தயார் செய்தவை
இ) இறக்குமதிப் பொருட்கள் ஈ) எதுவுமில்லை

**10. மக்கள் தொகையில் 1961-ம் வருடம் _______ எனப்படுகிறது.**
அ) சிறிய பிரிவினை வருடம் ஆ) மக்கள் தொகைவெடிப்பு வருடம்
இ) நகர மயமாதல் வருடம் ஈ) பெரும் பிரிவினை வருடம்

**11. V.K.R.V இராவ் இவரின் மாணவராக இருந்தார்**
அ) J.M.கீன்ஸ் ஆ) காலின் கிளார்க்
இ) ஆடம் ஸ்மித் ஈ) ஆல்பிரட் மார்ஷல்

**12. இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர்**
அ) M.S.சுவாமிநாதன் ஆ) காந்தி
இ) விஸ்வேஸ்வரையா ஈ) N.R.விஸ்வநாதன்

**13. வாழ்க்கை தரக் குறியீட்டெண்ணை உருவாக்கியவர்**
அ) திட்டக்குழு ஆ) நேரு இ) D.மோரிஸ் ஈ) பிஸ்வாஜித்

**14. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது**
அ) ஒரு முனைவரி
ஆ) அடுக்கடுக்கு விளைவுகளைக் கொண்டது
இ) மதிப்பு கூட்டப்பட்டவரி போன்றது
ஈ) ஒரு முனைவரி மற்றும் அடுக்கு விளைவுகளற்றது.

**15. குறிப்பிட்டகாலத்திற்கு மட்டும் வேலைவாய்ப்புப் பெறுவதை எப்படிக் கருதுவது?**
அ) திறந்த வேலைவாய்ப்பு ஆ) மறைமுக வேலைவாய்ப்பு
இ) பருவகால வேலைவாய்ப்பு ஈ) ஊரக வேலைவாய்ப்பு

**16. எந்தவருடம் வட்டார ஊரக வங்கி பயன்பாட்டிற்கு வந்தது?**
அ) 1965 ஆ) 1970 இ) 1975 ஈ) 1980

**17. எழுத்தறிவு வீதத்தில் தமிழ்நாட்டின் தரம்**
அ) இரண்டு ஆ) நான்கு இ) ஆறு ஈ) எட்டு

**18. தமிழ்நாட்டு உள்நாட்டு உற்பத்தியில் அதிகபங்கு வகிப்பது?**
அ) வேளாண்மை ஆ)தொழில் துறை இ) சுரங்கம் ஈ) பணிகள்

**19. x+y = 5, x-y = 3 என்றால் x ன்மதிப்பு ________ ஆகும்.**
அ) 4 ஆ) 3 இ) 16 ஈ) 8

**20. Ctrl + M என்ற ஆணை ________ பயன்படுத்தப்படுகின்றது.**
அ) சேமிக்க ஆ) நகலெடுக்க
இ) புதிய நழுமத்தைப் பெற ஈ) நழுமத்தை நீக்க

www.Padasalai.Net

## பகுதி - II 7 x 2 = 14

**ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையலளிக்கவும். அவற்றில் வினா எண் 30-**க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

21. பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளைக் கூறுக.
22. விருப்பங்களை வகைப்படுத்துக.
23. உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்துக.
24. கீழ்கண்ட நிறுவனத்தின் தேவைக்கோடு வரைக. (அ) நிறைவுப் போட்டி (ஆ) முற்றுரிமை
25. இலாபம் என்றால் என்ன?
26. தேசியமயமாதல் - வரையறு.
27. சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பதன் பொருள் என்ன?
28. தமிழ்நாட்டின் அணுமின்நிலையங்கள் எவை?
29. MS word ன் முக்கிய அம்சங்கள் யாவை?
30. ஊரக மின்மயமாக்கல் - வரையறு.

## பகுதி - III 7 x 3 = 21

**ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையலளிக்கவும். அவற்றில் வினா எண் **40-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

31. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
32. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?
33. நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?
34. AC மற்றும் MC எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.
35. நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
36. பண்த்தேவைக்கான நோக்கங்கள் யாவை?
37. நலப்பொருளாதாரம் பற்றி அமர்த்தியா சென்னின் கருத்துக்களை எழுதுக.
38. ஊக வறுமையை நீக்குவதற்கான வழிமுறைகளை கூறுக.
39. தமிழ்நாட்டிலுள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை?
40. பனிரெண்டாம் ஐந்தாண்டுத்திட்டம் பற்றி குறிப்பு வரைக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35**

41. அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

**(அல்லது)**

ஆ) உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சனைகளை விவரி.

42. அ) தேவை விதியை வரைபடத்துடன் விவரி.

**(அல்லது)**

ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.

www.Padasalai.Net

43. அ) மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக.

**(அல்லது)**

ஆ) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கு இடையேயான தொடர்பை விளக்குக.

44. அ) நிறைவுப்போட்டியில் எவ்வாறு விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுகிறது?

**(அல்லது)**

ஆ) ரிக்கார்டோவின் வாரக்கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி.

45. அ) காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக.

**(அல்லது)**

ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறுதொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.

46. அ) 2015-2020 ம் ஆண்டிற்கான ஏற்றுமதி - இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) ஊரக பொருளாதாரப் பிரச்சனைகளை ஆராய்க.

47. அ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக. (அல்லது)

**(அல்லது)**

ஆ) TC = 25q - 13q' + 50q +12 என்றால் இறுதிநிலை செலவுச்சார்பு, சராசரி செலவுச்சார்பு ஆகியவற்றை காண்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# VELLORE DISTRICT

11

## அரையாண்டுத் தேர்வு – டிசம்பர் - 2024

## பொருளியல்

## KEY ANSWER

**Prepared by**
**Dr. C.SUDHAKAR M.A., M.Phil., B.Ed., Ph.D.,**
GBHSS USSOOR
**K. SUDHAKAR M.A., B.Ed.,**
GHSS PANAMADANGI


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | இ. | பற்றாக்குறை | 11 | அ. | J.M.கீன்ஸ் |
| 2 | ஆ. | மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி | 12 | அ. | M.S.சுவாமிநாதன் |
| 3 | ஆ. | உச்சமாக | 13 | இ. | D.மோரிஸ் |
| 4 | ஆ. | உற்பத்தி சார்பு | 14 | ஈ. | ஒரு முனைவரி மற்றும் அடுக்கு விளைவுகளற்றது. |
| 5 | ஆ. | TVC / Q | 15 | இ. | பருவகால வேலைவாய்ப்பு |
| 6 | ஆ. | மொத்த வருவாய் | 16 | இ. | 1975 |
| 7 | ஆ. | முற்றுரிமை | 17 | ஈ. | எட்டு |
| 8 | ஆ. | காரணி விலைக் கோட்பாடு | 18 | ஈ. | பணிகள் |
| 9 | அ. | மனிதன் உருவாக்கியஉபகரணங்கள் | 19 | அ. | 4 |
| 10 | ஆ. | மக்கள் தொகைவெடிப்பு வருடம் | 20 | இ. | புதிய நழுமத்தைப் பெற |

21. **(இவற்றில் ஏதேனும் இரண்டு மட்டும்)**
1. இடப் பயன்பாடு 2. வடிவப் பயன்பாடு 3. உடைமைப் பயன்பாடு
4. காலப் பயன்பாடு 5. சேவைப் பயன்பாடு 6. அறிவுப் பயன்பாடு

22. இன்றியமையாத விருப்பம் - உணவு, உடை, இருப்பிடம்.
ஆடம்பர விருப்பம் - TV. மின்விசிறி.
வசதிக்கான விருப்பம் - தங்கம், வைரம்.

23. 1. நிலம் 2. உழைப்பு 3. மூலதனம் 4. தொழிலமைப்பு.

24.



25. தொழில் முனைவோரின் தொழில் திறமையை பயன்படுததிக் கொள்வதற்காக வழங்கப்படும் வெகுமதியே இலாபம் ஆகும்.

26. நாட்டுடைமையாக்கல் அல்லது தேசியமயமாக்கல் (Nationalization) என்பது தனியாரின் உடைமைகளை அல்லது நிறுவனங்களைப் பல்வேறு காரணங்களுக்காக ஒரு நாட்டின் அரசு கையகப்படுத்தும் நடவடிக்கையாகும்.

27. நிதிக் குறைபாடுகளை சமாளிக்கவும், நேரடி முதலீட்டை ஈர்க்கவும் 2000-ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் உருவாக்கப்பட்ட கொள்கைகள் ஆகும்.

28. 1.கல்பாக்கம் 2.கூடங்குளம்

29. 1. ஆவணத்தை உருவாக்க, நகலெடுக்க, வடிவமைக்க முடியும்.
2. வாக்கியங்களை இடையில் சேர்க்க, நீக்க முடியும்.
3. பிழை திருத்தம் செய்யலாம்.

30. **ஊரக மின்மயமாக்குதல் என்பது ஊரகப் பகுதிகளுக்கு மின் வசதியை ஏற்படுத்தித் தருவதாகும்.**

31. **நுண்ணியல் பொருளியல்:**
1. தனி பண்டத்தின் விலை, தனிப்பட்ட நிறுவனங்கள், தனி குடும்பங்கள் பற்றி ஆராய்கிறது.
2. பொருளாதாரத்தில் சிறு பகுதியை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.
3. இது விலைக் கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது.

**பேரியல் பொருளியல்:**
1. நாட்டின் ஒட்டு மொத்த செயல்பாடுகளைப் பற்றி ஆராய்கிறது.
2. நாட்டின் முழு பொருளாதாரத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.
3. இது வருவாய் கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது.

32. 1. வலது புறமாக கீழ் நோக்கி சரிந்து செல்லும்.
2. தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.
3. ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளாது.
4. X அச்சையோ Y அச்சையோ தொடாது.

33. 1. நிலம் இயற்கையின் கொடை ஆகும்.
2. நிலத்தின் அளிப்பு நிலையானது.
3. நிலம் அழிவில்லாதது.
4. நிலம் அசைவற்றது.
5. நிலம் செழிப்புத்தன்மை மற்றும் இட அமைப்புகளில் மாறுபடும் தன்மையுடையது.

**34.**

**I. இறுதிநிலைச் செலவுச்சார்பு (MC) :**

$$MC = \frac{d(TC)}{dq} = \text{(வகையிடுதல்)}\ 2.5q^3 - 13q^2 + 50q + 12$$

$$MC = 2.5(3q^2) - 13(2q) + 50(1) + 0$$

**இறுதிநிலை செலவுச்சார்பு $(MC) = 7.5q^2 - 26q + 50$**

**II. சராசரி செலவுச்சார்பு (AC) :**

$$AC = \frac{TC}{q}$$

$$AC = \frac{2.5q^3 - 13q^2 + 50q + 12}{q}$$

**சராசரி செலவுச்சார்பு $(AC) = 2.5q^2 - 13q + 50 + \frac{12}{q}$**

35. நிறுவனம்(**Company**)

1. ஒரு நிறுவனம் என்பது ஒரு தொழிற்சாலையில் இருக்கும் ஒரு உற்பத்தி அலகு ஆகும்.
2. **(எ.கா.)** சிமெண்ட் நிறுவனம், (சங்கர் சிமெண்ட்) Software Company

**தொழிற்சாலை- (Industry)**

1. தொழிற்சாலை என்பது பல நிறுவனங்களின் தொகுப்பு அல்லது குழுவைக் குறிக்கும்.
2. **(எ.கா.)** சிமெண்ட் தொழில், IT Industry

36. **1. பரிமாற்ற நோக்கம்:** மக்கள்அன்றாட செலவுகளுக்காக பணத்தை வைத்திருப்பது.
**2.முன்னெச்சரிக்கை நோக்கம்:** மக்கள் எதிர்பாராத செலவுகளுக்காக பணத்தை வைத்திருப்பது.
**3. ஊக நோக்கம்:** மக்கள் பங்குசந்தையில் முதலீடு செய்ய பணத்தை வைத்திருப்பது.

37. (i) வறுமை மற்றும் பஞ்சம் பற்றிய ஓர் கட்டுரையில் (1981) வறுமை பற்றி பல்வேறு விளக்கங்களை **"சென்"** ஆராய்ந்தார்.
(ii) வருமான பகிர்வு மற்றும் வறுமை கோட்டிற்கு கீழே உள்ள மக்களின் நுகர்வு ஆகியவை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது **சென்** அவர்களின் முக்கிய கருத்தாகும்.
(iii) ஊட்டச்சத்து உணவு, மருத்துவம், உடல் நலப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு ஆகியவை நமது உரிமைகளாக மாற வேண்டும் என்று **"சென்"** கருதினார்.

38. **(ஏதேனும் மூன்று)**
1. ஊரக வேலையின்மையும், ஊரக வறுமையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதால் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் மூலமாக வறுமையை ஒழிக்கலாம்.
2.வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் காலத்திற்கு ஏற்ப நடைமுறைபடுத்தல் வேண்டும்.
3.வேலை வாய்ப்பின்றி ஏழை மக்களின் வறுமையை ஒழிக்க முடியாது.
4.20 அம்சதிட்டம், IRDP, TRYSEM, JRY, FWP, NREP போன்றவை வறுமை ஒழிப்பு திட்டங்கள் ஊரக வறுமையை நீக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது.

**39.** **1. புனல் மின்சாரம்** : தமிழ்நாட்டில் 20-க்கு மேற்பட்ட புனல் மின் நிலையங்கள் உள்ளது. குந்தா, மேட்டூர், மரவகண்டி, பார்சன் வேலி ஆகியன முக்கியமானவையாகும்.
**2. சூரிய சக்தி மின்சாரம்** : தென் தமிழகம் சூரிய மின் சக்தி திட்டங்களைச் செயல்படுத்த உகந்த மண்டலமாகக் கருதப்படுகிறது.
**3. காற்றாலை மின்சாரம்** : இந்திய அளவில் தமிழ்நாடு அதிகளவு காற்று வழி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பைக் கொண்ட மாநிலமாக உள்ளது. மேலும் காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஏதுவான இடமாக திருநெல்வேலி, தூத்துக்குடியின் தெற்குப்பகுதி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்கள் உள்ளன.

**40.** **பனிரெண்டாம் ஐந்தாண்டுத்திட்டம்** (2012-2017)

1. இதன் முதன்மை நோக்கம் விரைவான மற்றும் நிலையான வளர்ச்சியே ஆகும்.
2. இதன் வளர்ச்சி இலக்கு 8% ஆகும் (GDP growth)
3. வேளாண்மை வளர்ச்சி இலக்கு 4%
4. வறுமையை குறைத்தல்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

41. அ) **ஆடம்ஸ்மித்** : ஒரு நாட்டின் செல்வம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது மற்றும் அதிகரிக்கப்படுகிறது என்பதை விளக்குகிறார். - **செல்வ இலக்கணம்**

**திறனாய்வு :**

1. மனித நலம் புறக்கணிக்கப்படுகிறது..
2. செல்வம் என்ற ஒன்றிற்கு மட்டுமே அதிக அளவு முக்கியத்துவம்

**ஆல்பிரட் மார்சல்:** ஒருபுறம் செல்வம், மற்றொருபுறம் மனித நலம் பற்றி படிப்பதே பொருளியல் என்பதை விளக்குகிறார். - **நல இலக்கணம்**

**திறனாய்வு:**

1. நலன் என்பது பற்றி தெளிவாக கூறவில்லை.
2.பொருள்சார் நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்துள்ளார்.

**இராபின்சன்:** விருப்பங்களோடும் கிடைப்பருமை (பற்றாக்குறை) உள்ள மாற்றுவழிகளில் பயன்படக்கூடிய சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றிய அறிவியலே பொருளியல் - **பற்றாக்குறை இலக்கணம்**

**திறனாய்வு :**

1. நலன்தரக்கூடிய பொருட்கள் அல்லது நலன்தரா பொருட்கள் என்று தரம் பிரிக்கவில்லை.
2. வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கவில்லை.

**சாமுவேல்சன்:** சமுதாயம் தற்கால வளங்களையும், எதிர்கால தலைமுறையும் பயன்படுத்துவது குறித்த இயல். - **வளர்ச்சி இலக்கணம்**

**முக்கிய கருத்துக்கள்:**


1. இந்த இலக்கணம் உற்பத்தி பகிர்வு, மற்றும் நுகர்வு போன்ற பல கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது.
2. சாமுவேல்சனின் இலக்கணம் பணம் பயன்படுத்தப்படாத, பண்டமாற்றும் பொருளாதாரத்திற்கும் பொருந்தக்கூடியது.

41. ஆ)

**உற்பத்தி வாய்ப்பு வளைகோடு:** ஏதேனும் இரண்டு பொருள்களை எடுத்துக் கொண்டால் அவற்றில் எதை எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வினா விற்கு பதில் தருவது.

**அனுமானம்**

1. காலத்தில் மாற்றம் இல்லை
2. தொழில் நுட்பம் நிலையானது
3. முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது.




**அடிப்படை பிரச்சினைகள்:**

1. என்ன பண்டம் உற்பத்தி செய்வது?
2.எவ்வாறு பண்டங்கள் உற்பத்தி செய்வது?
3. யாருக்காக பண்டங்கள் உற்பத்தி செய்வது?

**அட்டவணை:**

உற்பத்தி வாய்ப்பு வளைகோடு என்பது பல இணைப்புகளில் இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்வதை காட்டுகிறது. (உ.தா) உணவு, மோட்டார் வாகனம் (கார்)

**வரைபட விளக்கம் A (மற்றும்) B :**

1. வரைபடம் A யில் உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் மீது உள்ள P1, P2, P3, P4, P5, P6, புள்ளிகள் இரு பண்டங்களின் உற்பத்தி வாய்ப்பை குறிக்கிறது.
2. வரைபடம் A யில் P புள்ளி வளைகோட்டை தாண்டி வெளியே உள்ளது, இதை அடைய முடியாது.
3. வரைபடம் A யில் P7 அடைய முடியும், ஆனால் வளங்களை முழுமையாக பயன்படுத்தாத நிலையில் இருக்கும்.
4.வரைபடம் B யில் உற்பத்தி வாய்ப்பு வளைகோடு AE யில் இருந்து A1E1 ஆக மேல் நோக்கி

இடம் பெயருதல் பொருளாதார வளர்ச்சியை காட்டுகிறது.

**மைய பிரச்சினைக்கான தீர்வு/பயன்கள்:**

1. என்ன? எவ்வளவு? உற்பத்தி செய்வது என்பது உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டில் எந்த பகுதியை தேர்ந்தெடுப்பது என்பதில் உள்ளது.

2.உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் உட்பகுதியில் உள்ள புள்ளியை தேர்வு செய்வதால் பொருளாதாரம் திறனற்ற நிலையை காட்டுகிறது.

**42. அ)**

**தேவை விதி இலக்கணம்**

**எடுகோள்கள்**

**அட்டவணை**

**வரைபடம்**


42. ஆ)

ஆஸ்திரிய பொருளியல் வல்லுநரான H.H. காசன் என்பவர் இவ்விதியை 1854-இல் பொருளியலில் முதன்முதலாக உருவாக்கினார். எனவே ஜெவான்ஸ் இவ்விதியை "காசனின் முதல் நுகர்வு விதி" என அழைத்தார்.

**இலக்கணம்.**

"ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது" **ஆல்பிரட் மார்ஷல்.**

**எடுகோள்கள்.**




1. பயன்பாட்டை அளவிட முடியும்.
2. பணத்தின் இறுதிநிலை பயன்பாடு மாறாது.
3. பண்டங்கள் ஒரே தரமானவை.
4. கால இடைவெளி இன்றி தொடர்ந்து நுகர வேண்டும்.
5. பழக்கவழக்கங்கள் மற்றும் வருமானத்தில் மாற்றமில்லை.

**விதியின் எடுத்துக்காட்டு விளக்கம்.**

ஒரு நுகர்வோர் 7 ஆப்பிள்களை ஒன்றன்பின் ஒன்றாக நுகர விரும்புகிறார். முதல் ஆப்பிள் சாப்பிடும் போது அவருக்கு அதிக பயன்பாடு கிடைகிறது. மேலும் ஐந்தாவது ஆப்பிளில் இருந்து பெற்ற பயன்பாடு பூஜ்ஜியம் ஆகும். ஆறாவது, ஏழாவது ஆப்பிளை நுகர்ந்தால் அவர் பெறுவது எதிர்மறை பயன்பாடாகும்.

**வரைபடம்**

**அட்டவணை**

**வரைபட விளக்கம்**

1. மொத்த பயன்பாடு உச்சத்தில் இருக்கும்போது, இறுதிநிலை பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும்.
2. மொத்த பயன்பாடு குறையும்போது, இறுதிநிலை பயன்பாடு எதிர்மறையாக இருக்கும்.

**முக்கியத்துவம்.**


1. பொருளியலில் பல விதிகளுக்கு இது அடிப்படை ஆகும்.
2. நிதி அமைச்சருக்கு உதவுகிறது.

**திறனாய்வு.**

1. பயன்பாட்டை அளவிடமுடியாது.
2. தொடர்ந்து நுகர்வது நடைமுறைக்கு சாத்தியமில்லை.

www.Padasalai.Net

43. அ)
1.விளக்கம்
2. நிலைகள்
3. அட்டவணை
4. வரைபடம்




III அட்டவணை:

| மாறும் உள்ளீடுகளின் அலகுகள் (L) | மொத்த உற்பத்தி ($TP_L$) | இறுதிநிலை உற்பத்தி ($MP_L$) | சராசரி உற்பத்தி ($AP_L$) | நிலைகள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 2 | 2 | |
| 2 | 6 | 4 | 3 | I |
| 3 | 12 | 6 | 4 | |
| 4 | 16 | 4 | 4 | II |
| 5 | 18 | 2 | 3.6 | |
| 6 | 18 | 0 | 3 | |
| 7 | 16 | -2 | 2.28 | III |

((L) உழைப்பு மட்டும் மாற்றியமைக்கப்படுகிறது.)




43. ஆ.)



I.AR.TR.MR மாறாத விலை (நிறைவுப் போட்டி)

| Q விற்பனை | விலை AR | TR | MR |
|---|---|---|---|
| 1 | 5 | 5 | 5 |
| 2 | 5 | 10 | 5 |
| 3 | 5 | 15 | 5 |
| 4 | 5 | 20 | 5 |
| 5 | 5 | 25 | 5 |






II.AR.TR.MR விலை குறையும் போது (நிறைகுறைப் போட்டி)

| Q விற்பனை | விலை AR | TR | MR |
|---|---|---|---|
| 1 | 10 | 10 | 10 |
| 2 | 9 | 18 | 8 |
| 3 | 8 | 24 | 6 |
| 4 | 7 | 28 | 4 |
| 5 | 6 | 30 | 2 |
| 6 | 5 | 30 | 0 |
| 7 | 4 | 28 | -2 |



44. அ)நிறைவுப் போட்டி





44. ஆ.)

**இலக்கணம்:** “வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதேயாகும். **டேவிட் ரிக்கார்டோ**


**விளக்கம்**

ரிக்கார்டோ வாரக்கோட்பாட்டை குடியேற்றத்தின் மூலம் விளக்குகிறார். மக்கள் புதிய இடத்தில் குடியேறும் பொழுது முதலில் செழுமையான நல்ல நிலத்தையே பயிர் செய்வர் அதிக மக்கள் குடியேறும் போது நிலத்தின் தேவை அதிகரிக்கும் அதனால் இரண்டாம் தர நிலத்தை அவர்கள்

பயிர் செய்வர்.இந்நிலையில் முதல் தர நிலம் வாரத்தைப் பெறும். மக்கள்தொகை அதிகரிப்பதால், மூன்றாம் தர நிலமும் பயிர் செய்யப்படும். அப்பொழுது இரண்டாம் தர நிலம் வாரத்தைப் பெறும்.மேலும் முதல் தரநிலம் அதிக வாரத்தைப் பெறும். மூன்றாம் தர நிலம் எவ்விதவாரத் தையும் பெறாது. இது வாரமில்லா நிலம் இதை வரைபடம் மூலம் விளக்கலாம். **வரைபடம்**

**அட்டவணை**

| நிலத்தின் தரம் | உற்பத்தி | வாரம் |
|---|---|---|
| A | 40 | 20 |
| B | 30 | 10 |
| C | 20 | 0 |




**வரைபடவிளக்கம்**

1. முதல் தரநிலம் அதிக வாரத்தைப் பெறும்.
II. இரண்டாம் தர நிலம் குறைந்த வாரத்தைப் பெறும்.
III. மூன்றாம் தர நிலம் எவ்விதவாரத்தையும் பெறாது. இது வாரமில்லா நிலம்

**திறனாய்வு.**

1. தொடர்ந்து பயிர் செய்யப்பட்டால் நிலத்தின் செழுமை குறையும்.
2. உழைப்பு, முதல் ஆகியவற்றிக்கும் வாரம் உள்ளதாக நவீன பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

45. அ)(ஏதெனும் 5 **Point**)

**(i). கிராமக்குடியரசு:** காந்தியடிகள் "கிராமங்களில் இந்தியா வாழ்வதாகக் கூறினார்."
**(ii). இயந்திரங்கள்:** இயந்திரங்களை மிகப்பெரிய பாவம்' என்று வர்ணித்தார்.
**(iii). தொழில்மயம்:**தொழில்மயம் மனித இனத்தின் பெரும் சாபக்கேடு என்று காந்தி கூறினார்.
**(iv). உற்பத்தி பரவலாக்கம்:** வீடுகளிலேயே உற்பத்தி நடைபெற வேண்டுமென்றும் விரும்பினார்
**(v). கிராம சர்வோதயா:** "உண்மையான இந்தியா வாழ்வது நகரங்களில் இல்லை கிராமங்களில் தான்" கிராமங்கள் தன்னிறைவு பெற வேண்டும் என்றார்.
**(vi). உடல் உழைப்பு :** மனித உழைப்பு என்பதே உடல் உழைப்பு தான் என்று காந்தி கூறுகிறார்.
**(vii). அறக்கட்டளை கோட்பாடு:** தற்போதைய முதலாளித்துவ முறையை மாற்றி சமத்துவ சமூகத்தை உருவாக்குவதே அறக்கட்டளைக் கோட்பாடு ஆகும்.
**(viii). உணவுப் பிரச்சனை :** உணவுப் பொருட்களின் மீதான எந்த கட்டுப்பாடுகளையும் காந்தி எதிர்த்தார்.
**(ix). மக்கள் தொகை :** மக்கள் தொகையை கட்டுப்படுத்த சுயகட்டுப்பாடு மற்றும் பிரம்மசாரியத்தை வலியுறுத்தினார்.
**(x). மது விலக்கு:** மது நமக்கு எந்த விதத்திலும் துணை செய்வதில்லை, இந்தியா குடிகாரர்களின் நாடாக இருப்பதைவிட ஏழைகளின் நாடாக இருப்பதே மேல்.

45. ஆ)

1. சிறு தொழில்கள் மூலம் வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது.
2. சிறுதொழில் தரும் சமமான மண்டல வளர்ச்சி.
3. உள்ளூர் வளங்களை பயன்படுத்த சிறுதொழில் உதவி செய்கிறது.
4. மூலதன பயன்பாடு முழுமைபெற சிறுதொழில் வழிவகுக்கிறது.
5. சிறுதொழில்துறை ஏற்றுமதியை உருவாக்குகிறது.
6. சிறு தொழில் நிறுவனங்கள் நுகர்வோர் தேவைகளை நிறைவேற்றுகின்றன.
7. தொழில் முனைவோர்களை உருவாக்குகின்றன.
8. சிறு தொழில் நிறுவனங்கள் பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கு ஆதரவு தருகின்றன.

46. அ.)

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று 2015-2020 வரையிலான காலத்திற்கான புதிய அயல்நாட்டு வாணிபக் கொள்கையை அறிவித்தது.

1. இதன் சிறப்பு அம்சங்கள் ஏற்றுமதி உதவிகளை 25 சதவீத அளவு குறைக்கவும் இந்திய பொருட்களை ஊக்குவிக்கவும் "இந்திய தயாரிப்பு" என்ற கருத்து உருவாக்கப்பட்டது.
2. டிஜிட்டல் இந்தியா முறைப்படி வரி தாக்கல் முத்திரைத்தாள் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றிற்கான கைபேசி செயலி தயாரிக்கப்படுகின்றது.
3. ஏற்றுமதியாளர் - இறக்குமதியாளர் சுயவிவர ஆவணங்களின் அசல் நகல்களை மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.
4. பாதுகாப்பு ராணுவ கிடங்கு விண்வெளி மற்றும் அணுசக்தி போன்றவற்றை தொடர்பாக ஏற்றுமதி கோரிக்கைகளுக்கு கால அளவு 24 மாதங்கள் ஆகும்.
5. தற்போது உலக வர்த்தகத்தில் 3 சதவீதமாக இருக்கின்ற இந்தியாவின் பங்கை 2020-க்குள் இரு மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

46. ஆ.)

**1. மக்கள் தொடர்பு பிரச்சனை :** எழுத்தறிவின்மை, போதிய தொழில் நுட்ப அறிவின்மை, நம்பிக்கை குறைவு ஆகியவை.

**2. வேளாண்மை சார்ந்த பிரச்சனை :** உள்ளீடுகள் கிடைக்கப் பெறாமை, அங்காடிப்படுத்தும் வசதிகள் குறைவு, சிறு நிலங்கள் மற்றும் சிறு சிறு துண்டுகளாக்கப்பட்ட நிலவுடைமைகள் போன்றவை.

**3. உள் கட்டமைப்பு சார்ந்த பிரச்சனை :** நீர், மின்சாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, வங்கி மற்றும் காப்பீடு போன்ற வசதிகள் போதுமானதாக இல்லை.

**4.பொருளாதாரம் சார்ந்த பிரச்சனை :** குறைவான வருமானம், கடன்சுமை ஆகியவை பொருளாதாரம் சார்ந்த பிரச்சனைகளாக உள்ளது.

**5. நிர்வாகம் சார்ந்த பிரச்சனை :** குறைந்த கூலி, வரவு செலவுகளை சரிவர முறையான பயன்படுத்தாமை ஆகியவை நிர்வாகச் சிக்கல்கள் சார்ந்த பிரச்சனைகள்.

47. அ)

1. தமிழ்நாடு மிகச்சிறந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி கொண்டது.
2. நாட்டில் உள்ள நகரங்கள் கிராமப்புறங்களில் மற்றும் வேளாண் அங்காடி பகுதிகளை இணைக்க கூடிய தரமான சாலை போக்குவரத்தை கொண்டுள்ளது.
3. மாநிலத்தில் 28 தேசிய நெடுஞ்சாலைகள் 5036 கி.மீ. தொலைவினை இணைக்கின்றன.
4. தங்க நாற்கர திட்டம் முனையமாக நமது மாநிலம் உள்ளது.
5. சாலை போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
6. தமிழ்நாட்டில் உள்ள இருப்புப் பாதையின் மொத்த நீளம் ஆர் 6693 கி.மீ. ஆகும்.
7. சென்னையில் மேம்படுத்தப்பட்ட அதிவிரைவு மெட்ரோ இரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
8. பெரிய சர்வதேச விமான நிலையமாக சென்னை சிறந்து விளங்குகிறது.

47. ஆ)

I. இறுதிநிலைச் செலவுச்சார்பு (MC) :

$$MC = \frac{d(TC)}{dq} = \text{(வகையிடுதல்) } 2.5q^3 - 13q^2 + 50q + 12$$

$$MC = 2.5(3q^2) - 13(2q) + 50(1) + 0$$

இறுதிநிலை செலவுச்சார்பு $(MC) = 7.5q^2 - 26q + 50$

II. சராசரி செலவுச்சார்பு (AC) :

$$AC = \frac{TC}{q}$$

$$AC = \frac{2.5q^3 - 13q^2 + 50q + 12}{q}$$

சராசரி செலவுச்சார்பு $(AC) = 2.5q^2 - 13q + 50 + \frac{12}{q}$

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com